செ.வெ.எண்:948 நாள்: 04.11.2008

செய்தி வெளியீடு – 4.11.2008

நான்காம் கட்டமாக 40 இலட்சம்

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்

முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் விலைப்புள்ளிகள் திறப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் முன்னிலையில் 15.10.2008 அன்று மாலை 5.00 மணி அளவில் 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் (14 அங்குல அளவு) கொள்முதல் செய்வதற்கான உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பெற்றன. அதில் 19 நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் இருந்தன.

இந்த ஒப்பந்தப்புள்ளி உறைகள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலான, சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு மற்றும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்பட்டு அவ்வுறையில் உள்ள ஆவணங்கள் முதல் நிலை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த முதல் நிலை ஆய்வுக்குப்பின் 19 நிறுவனங்களும் தகுதி பெற்றன.

விரிவான ஆய்வுக்குபின் 17 நிறுவனங்கள் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை முழுவதுமாக நிறைவு செய்ததால் அடுத்தக் கட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டன.

தொழில் நுட்ப ஒப்பந்த நிபந்தனைகளை நிறைவு செய்யாத யூனிவேர்ட் டெலிகாம் லிமிடெட் மற்றும் ஐடெக் இந்தியா ஆகிய இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டன.

தகுதி பெற்ற 17 ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறைகள் (Price Bids) இன்று 4.11.2008 (செவ்வாய் கிழமை) மாலை 4.30 மணியளவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு உறுப்பினர்களாகிய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் (திமுக), சட்டமன்ற கட்சிகளின் தலைவர்கள் திரு டி. சுதர்சனம் (காங்கிரஸ்), திரு வை. சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), திரு மு. ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்) மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அப்துல் பாஸித் (முஸ்லிம் லீக்), திரு து. ரவிகுமார் (விடுதலை சிறுத்தைகள்) மற்றும் ஒப்பந்ததாரர்கள் / ஒப்பந்ததாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்பட்டன.

குறைந்த விலைப்புள்ளி (L1) குறிப்பிட்ட திருவாளர்கள் பீ.ஜீ. இன்டர்நேஷனல் நிறுவனத்தின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தி தொலைக்காட்சிப் பெட்டிக்கான இறுதி விலையை நிர்ணயம் செய்தபின்னர், மற்ற ஒப்பந்ததாரர்களிடம் இறுதி விலைப்புள்ளிக்கு தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்க ஒப்புதல் பெற்று, எந்தெந்த நிறுவனங்களிடமிருந்து எவ்வளவு கொள்முதல் செய்யலாம் என்பது குறித்து 5.11.2008 அன்று காலை 11.30 மணிக்குக் கூடி முடிவு செய்யலாம் எனக் குழு தீர்மானித்ததாக முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9